இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 05-02-2025

# மறைக்கப்படும் கும்பமேளா மரணங்கள்

**உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற கும்பமேளாவில் 48 பேர் உயிரிழந்துள்ளார்கள். அந்த மரணங்களைக் கூட மறைத்து தவறான கணக்கையும் காட்டி, உ.பி.அரசைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

இவர்களுக்கு உண்மையான பக்தி இருக்குமானால் பக்தர்களுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. பக்தியை கோவிலுக்கு வெளியே அரசியலில் மட்டும் காட்டக் கூடியது தான் பா.ஜ.க. கட்சியும், அதனைச் சேர்ந்தவர்களும். அதனால்தான் அலட்சிய மாக கும்பமேளாவை நடத்தி, அப்பாவி மக்களையும் பலி வாங்கி இருக்கிறார்கள்.

உலகில் அதிகமானவர்கள் கூடும் விழாக்களில் ஒன்றாக கும்பமேளா இருக்கிறது. இந்தியா முழுவதும் இருந்து கோடிக்கணக்கானவர்கள் கூடும் விழாவாக இது அமைந்து வருகிறது. உ.பி.மாநிலம் பிரயாக்ராஜ் மாவட்டத் தில் கடந்த 29 ஆம் தேதியன்று மட்டும் 9 கோடி பேர் வந்ததாக செய்தி நிறு வனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கங்கை கரையில் உ.பி.அரசாங்கம் வைத்திருந்த தடுப்புகள் எல்லாம் ஒரு சில நிமிடங்களில் பறந்துவிட்டது.

ஜனவரி 29 ஆம் தேதி அதிகாலை 1 மணி முதல் 2 மணி வரையில் அகாரா மார்க் பகுதியில் பெருங்கூட்டம் அலை மோதியது. தடுப்புகளையும் தாண்டிக் குதித்து பலரும் உள்ளே நுழைந்திருக்கிறார்கள். கட்டுக்குள் அடங்காத நெரிசலில் மக்கள் சிக்கினார்கள். ஒருவர் இறந்தார், இருவர் காயம் என்பது மாதிரி தான் முதலில் செய்திகள் வெளியானது. அதன்பிறகு இறந்தவர் எண்ணிக்கை முப்பது ஆனது. செய்தி நிறுவனங்களுக்கு இதனை வெளியிடக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அதனால் செய்தியை வெளியே விடாமல் வைத்திருந்தார்கள். ஒருவர் மரணத்துக்கே பிரேக்கிங் ஓலமிடும் மீடியாக்கள் 30 பேர் மரணத்துக்குப் பிறகும் மவுன மாகவே இருந்தன.

உத்தரப்பிரதேச மாநில அரசாங்கம் அறிவித்தது 30தான். ஆனால் உண்மையில் இறந்து போனவர்கள் 48 பேர் என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டுள்ளது. மருத்துவமனையில் இருந்து வெளியில் கொண்டு வரப்பட்டு பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உடல்களை எண்ணி, அந்த அடிப்படையில் 48 பேர் என்று அறிவித்துள்ளது 'டைம்ஸ்'

- **உத்தரப்பிரதேசம் - 14**
- **பீகார் - 7**
- **மத்தியப்பிரதேசம் - 5**
- **கர்நாடகா - 5**
- **மேற்கு வங்கம் - 4**
- **ராஜஸ்தான் - 3**
- **ஜார்கண்ட் - 2**
- **அசாம் - 1**
- **உத்தரகாண்ட் - 1**
- **அரியானா - 1**
- **குஜராத் - 1**
- **அடையாளம் காணப்படாதவர்கள் - 4**

என்ற பட்டியலை பெயர், வயதுடன் வெளியிட்டுள்ளது. ஆனால் உத்தரப்பிரதேசத்தில் இருக்கும் யோகி அரசாங்கம் சொல்வது 30 தான்.

இந்த 30 பேரும் கும்பமேளா கூட்ட நெரிசலில் சிக்கி இறக்கவில்லை, அவர்களுக்கு பல்வேறு நோய்கள் இருந்தது, அதனால் இறந்ததாக உ.பி. மாநில அதிகாரி விஜய் கிரண் ஆனந்த் சொல்லி இருக்கிறார்.

**"போக்குவரத்து தடைகள் ஏற்படுத்துவதற்கு முன்பே கும்பமேளாவில் குழப்பமான ஏற்பாடுகள் தான் பார்க்க முடிந்தது. பலமணி நேரம் நடக்க பக்தர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஜனவரி 27 ஆம் தேதி நிலைமை மிகவும் மோசமடைந்தது. வி.ஐ.பி. வருகையைக் காரணம் காட்டி பல்வேறு தடுப்புகள் அதிகரிக்கப்பட்டது. ஐந்து மணி நேரத்துக்கும் மேலாக மேளா பூட்டப்பட்டது. உள் வழிகள் தடை செய்யப்பட்டு இருந்தன. இதனாலும் பக்தர்கள் பல மைல் தூரம் நடக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்கள். ராஞ்சியைச் சேர்ந்த 15 பேர், அலகாபாத் சந்திப்பில் இருந்து மேளா மைதா னத்துக்கு 15 கிலோ மீட்டர் தூரம் தலையில் பொருட்களைச் சுமந்து கொண்டு நடந்து போனார்கள். பெண்களும், குழந்தைகளும் சிரமப்பட்டு நடந்து போனார்கள்.**

**மேளா நடக்கும் இடத்தில் வருவதும் போவதுமான பாதைகள் குழப்பம் ஏற் படுத்துவதாக இருந்தன. இதனால் ஆங்காங்கே தடியடி நடத்திக் கொண்டி ருந்தது காவல் துறை. அனுமதிச் சீட்டு வைத்திருந்தவர்களையும் உள்ளே விட வில்லை. திடீரென அங்குள்ள சிறுவியாபாரிகளின் கடைகளை எடுக்கச் சொன்னார்கள். அதனாலும் குழப்பம் வந்தது. திடீரென்று வி.ஐ.பி. பாதையை மாற்றினார்கள். இதனால் பக்தர்களின் பாதைகளில் குழப்பம் ஏற்பட்டது. கூட் டமும் அதிகம் ஆனது. முறையான முன்கூட்டியே திட்டமிடுதல் இல்லாததுதான் இதற்குக் காரணம்"** என்று 'தி வயர்' பத்திரிக்கையின் நிருபர் தான் நேரடி யாக பார்த்த காட்சிகளை எழுதி இருக்கிறார்.

உலகத்தையே கும்பமேளாவை பார்க்க வாருங்கள் என்று அழைத்தார் கள், ஆனால் கள நிலவரம் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது என்று அவர் எழுதுகிறார். உ.பி.அரசாங்கம் பல்வேறு விஷயங்களில் இருந்து ஒதுங்கிக் கொண்டு தனியார் நிறுவனத்தின் வசம் பல ஏற்பாடு களை ஒப்படைத்துள்ளது. இதனையும் ஒரு காரணமாக அந்த நிருபர் சொல்லி இருக்கிறார். சிறுசிறு வியாபாரிகளை கடை நடத்த முடியாமல் விரட்டியதற்கு அந்த நிறுவனத்தின் செயல்பாடே காரணம் என்கிறார்.

'நாங்கள் அனைத்தையும் மிகச் சரியாகச் செய்திருக்கிறோம்' என்று பத்து நாட்களுக்கு முன்னால் பேட்டி கொடுத்தார் உ.பி.முதலமைச்சர் யோகி ஆதித்யநாத். ஆனால் எதுவும் செய்யவில்லை என்பதை கும்பமேளா காட்சிகள் காட்டிக் கொடுத்து விட்டது. 17 மணி நேரத்துக்குப் பிறகு தான் உயிரிழந்தவர் எண்ணிக்கை 30 என்பதை உறுதி செய்தது யோகி அரசு.

**இதைப் பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்கக் கூட எதிர்க்கட்சி களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. பா.ஜ.க. செய்தால், யோகிகள் ஆண்டால் எதையும் கேள்வி கேட்கக் கூடாது என்பதுதான் சங்கிகள் சட்டம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சதீஷ் எம்.ஷெனாய் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், கடற்படை பணியாளர் அலுவலர் கமெண்டர் நிர்மல் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### ரூ.30.29 கோடி மதிப்பில் 147 அவசரகால ஊர்திகளின் சேவைகள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## 31 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கினார்!

**சென்னை, பிப்.5-**

**தமிழ்நாடு அரசின் அவசரகால ஊர்திகளின் சேவைகளை மேன் மைப்படுத்தும் விதமாக ரூ.30.29 கோடி மதிப்பில் 147 அவசரகால ஊர்திகளின் சேவைகளை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து, இளநிலை பகுப்பாய்வாளர் பணியி டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 31 நபர்களுக்கு பணிநியமன ஆணை களை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) தலைமைச் செயலகத்தில், மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், அவசரகால ஊர்தி சேவைகளை மேலும் செம்மை யாக செயல்படுத்தும் வகையில், 72 புதிய "108" அவசரகால ஊர்தி கள், மலை மற்றும் நிலப்பரப்பு பகு திகளுக்கான 4 புதிய நான்கு சக்கர அவசரகால ஊர்திகள், 31 புதிய இல வச அமரர் ஊர்திகள் மற்றும் 36 புதிய இலவச தாய்சேய் நல ஊர்தி கள், என மொத்தம் 29 கோடியே 15 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் 143 ஊர்திகளின் சேவை களையும், தமிழ்நாடு கேபிள் டிவி கம்யூனிகேஷன் லிமிடெட் நிறுவ னத்தின் சார்பில் 1 கோடியே 12 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மருத்துவ உபகரணங்க ளுடன் கூடிய 4 புதிய அவசர கால ஊர்திகளின் சேவைகளையும் கொடியசைத்து தொடங்கி வைத் தார். மேலும், உணவு பாதுகாப்புத் துறையில் இளநிலை பகுப்பாய்வா ளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப் பட்ட 31 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கி னார்.

### "108" அவசரகால ஊர்தி சேவைகள்!

'108' அவசரகால ஊர்தி சேவை யானது 2008ஆம் ஆண்டு செப் டம்பர் 15ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசா னது EMRI GHS என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் '108' அவசர கால சேவையை வழங்கி வருகி றது. பொதுமக்கள் அவசரகால மருத்துவ தேவைக்கு "108" என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு 24x7 மணி நேரமும் இலவசமாக பயன்பெற்று வருகின்றனர்.

மருத்துவ அவசரகால நெருக்க டியின் போது தேவையான மருத் துவ உதவியை இலகுவாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் பெற்று பயன்பெறும் வகையில் தற்போது 1,353 எண்ணிக்கையி லான '108' அவசரகால ஊர்திகள் செயல்படுத்தப்படுகின்றன. இவற் றில் 981 அடிப்படை வசதி கொண்ட அவசரகால ஊர்திகள், 303 மேம் படுத்தப்பட்ட அவசரகால ஊர்திகள், 65 பச்சிளங்குழந்தைகளுக்கான ஊர்திகள், 4 முக்கிய பிரமுகர்களுக் கான ஊர்திகளும் அடங்கும்.

7.05.2021 முதல் ஜனவரி 2025 வரை இத்திட்டத்தில் 18,25,880 கருவுற்ற தாய்மார்கள், 12,18,014 சாலை விபத்துகளில் காயமுற்றோர், 42,14,687 இதர அவசர கால மருத்துவ தேவைகள், என மொத்தம் 72,58,581 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இதனைத் தவிர, 41 இருசக்கர அவசரகால ஊர்திகள் மூலம் 1,42,649 பயனா ளிகளும், பச்சிளங்குழந்தைகளுக் கான சேவை மூலம் 82,098 பய னாளிகளும், பழங்குடியினர் பகுதி களில் வசிக்கும் 3,69,573 பயனா ளிகளும் பயனடைந்துள்ளனர்.

### இலவச அமரர் ஊர்தி சேவை!

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் இறக்க நேரிட்டால், அவர்கள் உடலை தமிழ்நாட்டில் உள்ள எந்த பகுதிக்கும் இலவச மாக அவர்களின் இருப்பிடத் திற்கோ அல்லது இடுகாட்டிற்கோ இலவச அமரர் ஊர்தி மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இச் சேவை '155377' என்ற தொலை பேசியின் மூலம் இலவசமாக 24 மணி நேரமும் வழங்கப்படுகிறது. இச்சேவையின் மூலம் விபத்து, இயற்கை பேரிடர் மற்றும் பேரழிவு காலங்களில் இறந்தோரது உடல் கள் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்படுவதோடு, அதன் பின் னர் அவர்களின் இல்லத்திற்கும் கொண்டு சேர்க்கப்படுகிறது.

இச்சேவை மூலம் 7.05.2021 முதல் ஜனவரி 2025 வரை 5,89,375 இறந்தோரது உடல்கள் இலவசமாக அவர்களின் சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட் டுள்ளன. தற்போது தமிழ்நாடு முழு வதும் 195 ஊர்திகள் இச்சேவை யின் கீழ் இயக்கப்படுகிறது.

### '102' - இலவச தாய்சேய் நல ஊர்தி சேவை!

'102' இலவச தாய்சேய் நல ஊர்தி சேவையானது, அரசு மருத் துவமனைகளில் பிரசவிக்கும் தாய் மார்கள் இலவசமாக அவர்கள் இல் லத்திற்கு கொண்டு சேர்க்கும் சேவையாகும். 7.05.2021 முதல் ஜனவரி 2025 வரை 9,48,715 தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் இச்சேவையை பயன்படுத்தியுள்ள னர். தமிழ்நாடு முழுவதும் தற் போது 109 இலவச தாய்சேய் நல ஊர்திகள் இயங்கி வருகின்றன.

### புதிய அவசரகால ஊர்தி சேவை, இலவச அமரர் ஊர்தி மற்றும் இல வச தாய்சேய் நல ஊர்தி சேவைகளை தொடங்கி வைத்தல்

தமிழ்நாடு அரசின் அவசரகால ஊர்திகளின் சேவையை மேலும் செம்மையாக மேம்படுத்திடும் வகையில் 72 புதிய அடிப்படை வசதி கொண்ட அவசரகால ஊர்தி கள், மலை மற்றும் நிலப்பரப்பு பகு திகளுக்கான 4 எண்ணிக்கையி லான நான்கு சக்கர அவசரகால ஊர்திகள், 31 புதிய இலவச அமரர் ஊர்திகள் மற்றும் 36 புதிய இலவச தாய்சேய் நல ஊர்திகள், என மொத் தம் 29 கோடியே 15 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் 143 எண்ணிக்கையிலான ஊர்திகளின் சேவையை முதலமைச்சர் அவர் கள் இன்றையதினம் கொடிய சைத்து தொடங்கி வைத்தார்.

இந்த அவசரகால சேவைகள் அனைத்தையும் சீரிய முறையில் செயல்படுத்திட 4 கோடியே 70 இலட்சத்து 93 ஆயிரத்து 745 ரூபாய் செலவில் மென்பொருள் மேம்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

மேலும், தமிழக கேபிள் டிவி கம் யூனிகேஷன் லிமிடெட் நிறுவனத் தின் சார்பில் 1 கோடியே 12 இலட் சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மருத்துவ உபகரணங்களுடன் கூடிய 4 புதிய அவசர கால ஊர்திக ளையும் பொதுமக்களின் பயன் பாட்டிற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடிய சைத்து தொடங்கி வைத்தார்.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள்வரை 121.58 கோடி ரூபாய் செலவில் 515 மருத்துவச் சேவைக்கான அவசரகால ஊர்தி கள் வழங்கப்பட்டுள்ளது.

### உணவு பகுப்பாய்வு கூடங்க ளில் இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப் பட்ட 31 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்

தமிழ்நாடு உணவுப் பாதுகாப் புத் துறையானது தரமான, பாது காப்பான உணவு பொது மக்க ளுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் விதத்தில் பல்வேறு திட் டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் பாளையம்கோட்டை ஆகிய ஆறு இடங்களில் உணவு பகுப்பாய்வு கூடங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த உணவு பகுப்பாய்வு கூடங் கள் மூலமாக தமிழ்நாடு முழுவ தும் உணவு பாதுகாப்பு அலுவலர் களால் எடுக்கப்படும் உணவு மாதிரிகளின் தரம் குறித்து பகுப் பாய்வு செய்யப்பட்டு வருகிறது.


மேற்கண்ட அனைத்து உணவு பகுப்பாய்வகங்களும், அளவுத் திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் (National Accreditation Board for Testing and Calibration Laboratories) மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (Food Safety and Standards Authority of India) ஆகி யவற்றால் வழங்கப்பட்ட ஒருங்கி ணைந்த சான்றிதழை பெற்று சிறப் பாக செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு உணவு பகுப்பாய்வ கத்திலும் ஓர் ஆண்டிற்கு சுமார் 6000 உணவு மாதிரிகள், என ஆறு உணவு பகுப்பாய்வு கூடங்க ளில் மொத்தம் 36,000 உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படு கிறது. உணவு பொருள்களின் தரம் குறித்த பகுப்பாய்வு அறிக்கையா னது சம்மந்தப்பட்ட மாவட்ட நிய மன அலுவலர்களுக்கு உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்பட்டு வருகிறது.

இதில் இளநிலை பகுப்பாய்வா ளர்களின் பணியானது உணவு பாதுகாப்பு அலுவலர்களால் எடுக் கப்படும் உணவு மாதிரிகளின் தரம் குறித்து உணவு பகுப்பாய்வு கூடங்களில் பகுப்பாய்வு செய்வதா கும். இப்பணிகளை செம்மையாக வும், துரிதமாகவும் மேற்கொள் ளும் வகையில், உணவு பாதுகாப்புத் துறையில் உணவு பகுப்பாய்வு கூடங்களில் காலியாக வுள்ள இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கு மருத்துவப் பணி யாளர் தேர்வு வாரியம் வாயிலாக தேர்வு நடத்தப்பட்டு, 31 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இளநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப் பட்ட 31 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடை யாளமாக முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன் முடி, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச் சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகா னந்தம், மருத்துவம் மற்றும் மக் கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர். லால் வேனா, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், தமிழ்நாடு கேபிள் டிவி கம்யூனிகே ஷன் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் சு.வெள்ளைசாமி மற் றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய குடியரசு தின என்.சி.சி. முகாமில் நடைபெற்ற திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற என்.சி.சி. மாணவ, மாணவிகளை பாராட்டி ஊக்கத்தொகை பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தேசிய மாணவர் படையின் டெபுடி டைரக்டர் ஜெனரல் கமோடோர் எஸ்.ராகவ், இயக்குநர் கர்னல் வக்கீல் குமார், குரூப் கேப்டன் பிரபு ஆகியோர் உள்ளனர்.